எதுவும் கூறவில்லை. முதலமைச்சர்களின் மாநாடு கூட மிக ரகசியமாகத்தான் நடைபெற்றது, அலுவலர்கள் யாரும் அனுமதிக்கப்படாமல் மாநாடு நடைபெற்றது. அதற்குப் பிறகு, பிரதம மந்திரியை முதலமைச்சர்கள் தனித்தனியாகச் சந்தித்து, பல விஷயங்கள் குறித்துப் பேசியிருக்கிறோம். அதன் தொடர்பாகத்தான், டெல்லியில் நிருபர்கள் என்னைச் சந்தித்தபோதும், தமிழகத்திற்கு வந்தபிறகு நிருபர்கள் என்னைச் சந்தித்தபோதும், "இந்தியப் பாதுகாப்புக்காக, குறிப்பாக இந்திய மக்கள்—சிறப்பாக தமிழ்நாட்டு மக்கள், மேலும் பல தியாகங்களைச் செய்ய வேண்டியிருக்கும்" என்று சொன்னேன். இன்றைக்கு டெல்லியிலிருந்து ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது எந்தவகையிலும் மாநில அளவிலே விதிக்கப்படுகின்ற வரிகளைப் பொறுத்தது அல்ல. நமது மாநிலமும் இந்திய நாட்டின் பாதுகாப்பை எண்ணி, நாம் ஆற்ற வேண்டிய பணிகளை எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல் ஆற்றுவதற்கு முன்வர வேண்டும். இந்த வேண்டுகோளை, டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு விளக்கமாகத்தந்து, இது போதும் என்று கருதி அமர்கிறேன்.

(3) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

(அ) நாக்ஸலைட் வன்முறை என்ற பெயரில் காவல்துறை பல மாவட்டங்களில் எடுத்துள்ள நடவடிக்கை குறித்து.

Mr. SPEAKER : I have received notice of adjournment motions from Thiru K. T. K. Thangamani regarding police action in the pretext of Naxalite violence, even in labour and kisan disputes as in Pallipalayam (Salem), Kadayampatti (Coimbatore), Alangudi (Tiruchy), Gudaloor (Madurai), B2 Station, Madurai, and Kalyanapuram (Ramanad West), etc.
and Kalyanapuram Ramanad West, etc.

I have also received similar adjournment motions from Thiru A. K. Subbiah with regard to Kadayampatti (Thanjavur district) and Gudalur (Nilgiris district), from Dr. H. V. Hande with regard to Gudaloor (Nilgiris district) and from Thiru K. Suppu with regard to closure of Saradha Studio, Madras.

I request the hon. Members to briefly explain how this matter comes within the purview of adjournment motions.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இந்த அட்ஜெர்ன்மென்ட் மோஷனை 2-ம் தேதி பிற்பகல் கொடுத்துவிட்டேன், அவர்களுக்குத் தெரியும். சென்ற சட்டமன்றத் தொடர் முடிந்து 12 வாரங்கள் ஆகின்றன. இந்த 12 வார காலத்தில் ஏதாவது ஒரு தினத்தில் சம்பவங்கள் நடந்திருந்தாலும், அந்தச் சம்பவங்கள் 21-ம் தேதிக்கு முன்னால் ஒன்றிரண்டு தினத்திற்கு முன்னதாக நடந்ததாகக் குறிப்பிடப்படும். இவை சமீபத்தில்தான் நடந்தவை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக ஆங்காங்கு போலீஸார் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றியெல்லாம் அப்பொழுதே விசாரணைக்குக் கொண்டுவரலாமென்றிருந்தாலும்கூட சில விஷங்கள் அத்துமீறிப் போன காரணத்தினால், ஒற்றிவைப்புத் தீர்மான

மாகக் கொண்டுவரக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உதாரணமாக, சடயாம் பட்டி பவானிக்கு அருகாமையில் உள்ள சிறு பஞ்சாயத்துக் கிராமம், என்பதை நாம் எல்லாம் அறிவோம். அங்கே குடும்பத் தகராறு காரணமாக வந்த விஷயத்தை அங்கே இருக்கக்கூடிய சப் இன்ஸ்பெக்டர் 'நக்ஸலேட்' நான்கு பேர்களைக் கொலைசெய்துவிட்டார்கள் என்று தவருக தந்தி கொடுத்து டி.எஸ்.பி. அவர்கள் அந்த கிராமத்திற்குள் புகுந்து அங்கேயுள்ளவர்களை ஆண், பெண் என்று வித்தியாசம் பாராது மோசமாகத் தாக்கியிருக்கிருர்கள். அது விசாரிக்கப்பட வேண்டும். அது மாத்திரமல்ல. எந்த விவகாரமாக இருந்தாலும்கூட அது நகஸலேட் என்று கிளப்பி அங்கிருக்கக்கூடிய மக்களைக் கொடுமைப்படுத்தக்கூடிய போக்கு நிறுத்தப்படவேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பள்ளிபாளையத்திலே முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் அடிப்படையிலே சம்பவங்கள் கொஞ்சங்கொஞ்சமாக முற்றிப்போய் இதேமாதிரியான முறையிலே கைதுசெய்யப்பட்டு தாக்கப்பட்டு இருக்கிருர்கள். நான் சொல்வது உண்மையென்பதை அங்கேயிருந்து தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கக்கூடிய சட்ட மன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். தொழிலாளர்கள் வேண்டுமென்றே தகராறு செய்தால் நான் அதை நியாயப்படுத்தக்கூடியவன் அல்ல. போலீஸார் அத்து மீறி நடந்து அதன் காரணமாக சில தலைவர்கள், குறிப்பாக என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் அவமானப்படுத்தப்பட்டிருக்கிருர்கள் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்குமிடையே தகராறுகள் நடக்கின்றன. இரண்டாயிரம் பேர்கள் வேலை செய்யக்கூடிய சாரதா ஸ்டியோவில் ஆயிரம் பேர்களைத்தான் வேலைக்கு எடுத்துக்கொள்வோம், ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுக்கமாட்டோம் என்று சொன்னல் அதைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : மாண்புமிகு உறுப்பினர் போன்ற கட்சித் தலைவரே புரிந்துகொள்ளாமல் பேசிக்கொண்டிருக்கிருர்கள். சாரதா ஸ்டுடியோவிலே வேலைசெய்கிறவர்களே 242 பேர்கள்தான். அப்படியிருக்கும் பொழுது ஆயிரம்பேர்களைத்தான் வேலைக்கு எடுத்துக்கொள்வோம், ஆயிரம் பேர்களுக்கு வேலைகொடுக்கமாட்டோம் என்று அவர்கள் சொன்னதாக நினைப்பது தவறு, எனவே அதைத் திருத்திக்கொள்ளவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : I stand corrected. அங்கேயிருக்கக்கூடிய தொழிலாளர்களில் பாதிப் பேர்களுக்குத்தான் வேலை கொடுப்போம், பாதிப் பேர்களுக்கு வேலை கொடுக்கமாட்டோம் என்று சொன்னர்கள்.

I can prove there are thousand labourers there but I do not want to enter into any controversy now on that.
அவர்கள் வேலை வேண்டுமென்று கேட்டபொழுது அவர்களை போலீஸார் 40 மைல், 50 மைல் தூரத்திற்கு அப்பால் அடித்துச் செல்லக்கூடிய நிலைமையில் 100 பேர்களுக்கு மேலே கைதுசெய்யப்பட்டிருக்கிருர்கள். அதற்கென்று ஒரு இலாகா இருக்கிறது, அதைத் தீர்த்து வைத்து இருக்கலாம். போலீஸார் தலையிட்டிருக்கவேண்டாம். மாணவர்களைப்பற்றி எங்களுடைய கொள்கையைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறேம், மாணவர்கள் இருக்கக்கூடிய காம்பஸ்க்குள் போலீஸார் செல்லக்கூடாது என்று தீர்மானம் போட்டுத் தெரிவித்து இருக்கிறேம் செயின்ட் சேவியரிலே போலீஸார் நுழைந்திருக்கிருர்கள்.

அதுமட்டுமல்ல, விவாசாயிகளுக்குப் பாதுகாப்புத் தருகின்ற அரசு என்று சொல்லிக்கொள்கின்ற அதே நேரத்தில் அவர்கள் விவசாயம் செய்கிற பயிரை அழித்து 48 பேர்கள் வரையில் மதுரைக்குப் பக்கத்திலே உள்ள கம்பம் கூடலூர் பகுதியிலே கைதுசெய்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி விவசாயிகளுக்கும் நிலச்சுவான்தாரர்களுக்கும் இடையே தகாராறு. தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே தகாராறு, மாணவர்களுடைய கோரிக்கைகள்—மாணவர்கள் என்ன விஷயத்தைக் கிளப்பிவிடப்போகிறார்கள், மதுரையிலே நான்-வெஜிடேரியன் புட் வேண்டுமென்று கேட்கிறார்கள் இம்மாதிரியான விஷயங்களிலே போலீஸார் தலையிட்டு நிலைமையைச் சிக்கலாக்கி விடுவதால் என்ன செய்வது என்று தெரியாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. கடையம்பட்டி, பள்ளிபாளையம் இங்கேயெல்லாம் இளம் பெண்களைக் கோரமாக நடத்தியிருக்கிறார்கள். இதைப்பற்றி ஆங்காங்கே அறிக்கைகள் விட்டிருந்தாலும் இங்கே வலியுறுத்துவதற்குக் காரணம் 12 வாரங்களுக்குப் பிறகு இந்தச் சபை கூடுகிறது. இப்படிப்பட்ட விஷயங்களைப்பற்றி அவர்களே 82-வது பிரிவின்கீழ் அறிக்கை கொடுக்கலாம், அல்லது நாங்கள் பிரிவு 41-ன் கீழ் நோட்டீஸ் கொடுக்கின்றபோது அவர்கள் தெளிவாக்கலாம். இன்று காலையிலே வந்த செய்திபற்றி முதலமைச்சர் அவர்கள் தெளிவாக்கினார்கள். நேற்று சைக்லோன் வந்தது பற்றி அவர்கள் தெரிவிக்கலாம், வார்னிஷ் குடித்து 50 பேர்கள் இறந்தார்கள் அதைப்பற்றி அவர்கள் தெரிவிக்காம், சிவகாசியில் 10 பேர்கள் இறந்தார்கள் அதைப்பற்றி அவர்கள் தெரிவிக்கலாம். It will be taking the House also into confidence அவர்களே 82-வது பிரிவின் கீழ் இந்தச் சபைக்கு விளக்கலாம். அல்லது நாங்கள் கொடுக்கின்றபோது 41-வது பிரிவின்கீழ் விளக்கங்கள் சொல்லலாம். மதுரை மகாலட்சுமி அல்லது வேறு எந்த மில்லோ பற்றி நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தால் அதைப் பற்றி இந்தச் சபைக்குச் சொல்வது அரசுக்கும் நல்லது, அதற்காக சபையை அவர்கள் அவமதித்தார்கள் என்று நான் சொல்லவில்லை, இந்தச் சபைக்கு மரியாதை காட்டக்கூடிய வகையில் 82-வது பிரிவின் கீழோ அல்லது 41-வது பிரிவில் நாங்கள் கேட்கும்பொழுதே அவர்கள் பதில் சொல்லலாம்; அடுத்த சட்டமன்றத் தொடரில் சொல்லி என்ன பிரயோஜனம்? கேள்விகளைப் பொறுத்த வரையில் நான் முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கொடுத்த கேள்விகள் இன்னும் வரவில்லை. நான் இதையெல்லாம் ஆலோசனை செய்துபார்த்தேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒத்திவைப்புத் தீர்மானம் என்று கொடுத்துவிட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போலீஸ் மானியத்திலே பேசவேண்டியதைப் பேசி, அதற்குப் பிறகு சட்டசபை மானியத்திலே பேச வேண்டிய விஷயங்களைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இருக்கின்ற நேரமோ குறைவு, இருக்கின்ற நேரத்திலே அவர்கள் சுருக்கமாக முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சபைக்கு முன்னால் முக்கியமான விஷயங்களைப் பற்றி அரசே விளக்கிவிடலாம். போலீஸ் நடவடிக்கைகள் சம்பந்தமாக அரசினுடைய நிலை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

DR. H. V. HANDE: I want to talk only from a particular angle. There are certain reasons for police excess.....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எல்லாம் மொத்தமாகப் பேசி விட்டால் பதில் சொல்லவே முடியாது.

Dr. H. V. HANDE : I would like to stress the most important point with regard to Gudaloor evictions. As far as Police excesses are concerned, recently also the Hon. Minister for Law......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் என்று கொடுத்துவிட்டு அவர்கள் பொதுப்படையாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பேசினால் எந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டோம், எந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தள்ளிவிட்டோம் என்பதைக்கூட அறுதியிட முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போலீஸ் எக்ஸஸ் என்ற தலைப்பிலே கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறுவதும் ஒரு கருத்துத்தான். கூடலூரில் நடந்தது என்று ஒன்று கொடுத்திருக்கிறார்கள், கடையாம்பட்டி என்று ஒன்று கொடுத்திருக்கிறார்கள், சாரதா ஸ்டுடியோ என்று கொடுத்திருக்கிறார்கள், இவைகள் எல்லாம் தொழிலாளர்கள் தகராறு என்ற நிலைமையிலே அல்லாமல் போலீஸ் எக்ஸஸ் என்பதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறமாதிரி ஒரே ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குள் வருகிறமாதிரித்தான் கொடுத்திருக்கிறார்கள்.

Dr. H. V. HANDE : Though I do not agree with the hon. Member Thiru K. T. K. Thangamani, there is a general feeling that this Naxalite trouble is being overplayed in certain sections and the Hon. Chief Minister is misled. I do not think it is deliberate but it appears to be so and he is at times misled by certain officials in certain parts. Certain things have happened in Coimbatore and Maduari. Recently even in Addison and Co., there were two groups. Members belonging to one group manhandled members belonging to another group. They physically assaulted the other group. They belonged to a particular party. I want the Hon. Chief Minister to take an objective view of these things and he must see that such sort of atmosphere is not created in the labour field. Let not the workers feel that if they belong to one group, affiliated to a particular party, they can indulge in this sort of naxalite activity. Let us not encourage this thing. That is one aspect.

Finally, about Gudalur aspect also, there is a feeling that there are two groups and inter-regional problems are also there. The Hon. Chief Minister has given certain explanation. My purpose in giving the motion was not to find fault with this particular Gudalur affair. I would like to know what exactly is the position of the Government in this Gudalur affair and what exactly has happened from the point of view of the Government. The House is entitled to know what the Government's version is.

* திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, இந்த சாரதா ஸ்டுடியோவில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பற்றி என்னுடைய கட்சித் தலைவர் இங்கே கூறியது தவறு என்று எடுத்துரைத்து அதற்குச் சரியான தக்க பதிலைத் தந்ததற்காக நான் முதலமைச்சரவர்களுக்கு முதலில்

நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சாரதா ஸ்டூடியோவில் பணியாற்றிய தொழிலாளர்கள் போராட்டம் நடத்திய நேரத்தில், உண்ணுவிரதப் போராட்டம் நடத்திய தொழிலாளர்களைப் போலீசார் பிடித்து 60 மைல்களுக்கு அப்பாலுள்ள மணக்காடு என்ற இடத்தில் இறக்கி விட்டிருக்கிறார்கள். இதனால் போராட்டம் கூடப் பாதிக்கப் பட்டிருக்கிறது. அதேசமயத்தில் இன்றைக்கு கதவடைப்பு செய்யப்பட்டிருக்கும் அந்த ஸ்டுடியோவினை லீஸ் எடுத்திருப்பவராக இருக்கும் திரு. ஏ. எல். சீனிவாசன் அவர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு நெருங்கிய நண்பர் என்று நினைக்கிறேன். அவருக்கு ஒயின் பேக்டரி லைசென்ஸ் கிடைத்திருக்கிறது. அதனால் அவருக்குக் கவலையில்லை. ஆனால் தொழிலாளர்கள்தான் நடுத் தெருவில் இருக்கிறார்கள். இது அவர்களுடைய அவசரப்பிரச்சினையாக இருப்பதால், இந்தச் சபையின் பிற நவடிக்கைகளை ஒற்றிவைத்து இதை விவாதிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, திரு. தங்கமணி அவர்கள் எல்லா விஷயங்களையும் இங்கு அமைச்சரவையில் 82-வது விதியின்டி அறிக்கைகளாக வைக்க வேண்டுமென்று கூறினார்கள். சில விஷயங்களை அறிக்கைகளாக வைப்பது என்பது மரபாக இருந்து வருகிறது. சிலவற்றை மாண்புமிகு உறுப்பினர்களே கேட்டுச் சொல்வது என்பது மரபாக இருந்து வருகிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் அதுதான் 'பெட்டர்' என்று சொல்கிறார்கள். இன்றைக்கு டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த அவசரச் சட்டத்தைப்பற்றி அவர்கள் முதலிலே எழுப்பாமல் நானே அறிக்கை வைத்தால் பத்திரிகைகளிலே என்னுடைய பெயர் மட்டும்தான் வரும். இந்தப் பிரச்னையை எழுப்பியவர்களைப் பத்திரிகைகளில் விட்டு விடுவார்கள். ஆகவேதான், இதில் எல்லோருக்கும் பங்கு இருக்கவேண்டும் என்ற வகையில்—விளம்பரம் என்பதாகச் சொல்லவில்லை—எல்லோருக்கும் பங்கு இருக்க வேண்டுமென்ற வகையில், எல்லாவற்றையும் அரசாங்கமே மற்றவர்களுக்கு முந்திக் கொண்டு எடுத்துச் சொல்வது என்பதாக அல்லாமல் பல்வேறு விதிகளின்படி பல பிரிவுகளில் சபையினுடைய கவனத்தை ஈர்க்கும் வகையில் தங்கள் எண்ணத்தை எடுத்துச் சொல்ல ஒற்றிவைப்புத் தீர்மானம் என்ற வகையிலேயும், கவன ஈர்ப்புத் தீர்மானம் என்ற வகையிலும் இப்படிப் பல தீர்மானங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் உறுப்பினர்கள் பயன்படுத்திக் கொள்வதைப்பற்றி எந்தவிதமான ஆட்சேபணையுமில்லை.

அதிலே ஏற்பட்ட காலதாமதம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது தவிர்க்கப்பட வேண்டுமென்பதில் நாங்கள் மிகுந்த அக்கறை உள்ளவர்கள். காலதாமதம் சிலநேரங்களில் ஏற்பட்டு விடுவதற்குக் காரணம், கொடுக்கப்பட்ட கவன ஈர்ப்புகள் அல்லது ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் பற்றிய விவரங்களை நாங்கள் அந்தந்த மாவட்டங்களிலிருந்து அறிய வேண்டியிருக்கிறது. சரியான தகவல்களை சபைக்குத் தர வேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் இடையிலே கொஞ்சம் காலம் தேவைப்படுகிறதேயல்லாமல் வேண்டுமென்றே காலதாமதம் செய்ய வேண்டுமென்பதற்காக அரசாங்கமோ அல்லது அமைச்சர்களோ யாரும் விரும்புவதில்லை என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். கூடுமானவரையில் இப்படிப்பட்ட விவரங்களைச் சேகரித்து அவைக்கு வழங்குவதில் மேலும் சுறுசுறுப்பு காட்டப்படும். இதற்கு அதிகாரிகளும் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கையையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

கடையாம்பட்டி சம்பவத்தைப்பற்றிச் சொன்னார்கள். ஏதோ நக்சலைட் என்று போலீசாரால் பிரச்சாரம் செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டார்கள். அப்படிப் பிரச்சாரம் எதுவும் செய்யப்படவில்லை. நக்சலைட் இல்லாதவர்களை நக்சலைட் என்று கூறுவதாகக் குற்றம் சாட்டப்பட்டது. இதே அவையில் கடந்த 2, 3 ஆண்டுகளில் எந்தக் குற்றமானாலும், எந்தக் காரியம் எங்கே நடந்தாலும், எந்த நிகழ்ச்சி விளைந்திருந்தாலும் இவைகளெல்லாம் நக்சலைட்களால்தானா, நக்சலைட்களால்தானா என்ற கேள்வி கேட்கப்பட்டதை நான் மறக்கவில்லை. பிறகு ஆளுங்கட்சியிலே உள்ள சிலபேர்களுக்கு சில ஆபத்துகள் ஏற்பட்ட நேரத்தில் நக்சலைட் நடவடிக்கைகள் இருந்தன என்று நாட்டிலே செய்திகள் வெளிவந்தபிறகு அதை மறுக்கும் வகையில் எதற்கெடுத்தாலும் நக்சலைட், நக்சலைட், என்று சொல்கிறார்கள் என்ற வாதங்கள் இப்போது கேலியின் அடிப்படையில், கண்டனத்தில் அடிப்படையில் பிறப்பதைக்காண நான் உள்ளபடியே வருத்தமடைகின்றேன்.

குறிப்பாக இந்த கடையாம்பட்டி விவகாரத்திற்கு நக்சலைட் என்ற காரணம் எதுவும் காட்டப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே இரு பாலாரிலும் ஏறத்தாழ 10 பேர்களுக்குமேல் கைது செய்யப்பட்டு அவர்கள்மீது 16-10-71-லே குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, பவானி சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலே இப்போது அது விசாரணையில் இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றி நான் விசாரணையில் இருப்பதைப் பற்றி விரிவாக இங்கே கூறுவது முறை அல்ல என்பதால் அது ஒற்றி வைத்து விவாதிப்பதற்கான ஒன்று அல்ல என்பதைத் தங்களுக்குத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே பள்ளிப்பாளையத்திலே அங்கேயுள்ள விசைத்தறி உரிமையாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட தகராறுகளிலே 5 வழக்குகள் இப்போது தனித்தனியாகப் பல பிரிவுகளில் பதிவு செய்யப்பட்டு போலீசார் புலன் விசாரித்து வருகிறார்கள். அதிலே போலீசார் அத்து மீறி நடந்துவிட்டார்கள் என்றெல்லாம் குறை கூறப்பட்டது. அப்படி நடந்திருநதால் அவைகளைப்பற்றி இலாக்கா பூர்வமாக நிச்சயமாக நான் விசாரிப்பேன் என்பதைத் தொழிற்சங்கத்தின் தலைவர்களுக்கு நான் எடுத்துக் கூறியிருக்கிறேன். அங்கே போலீசார் பாரபட்சமாக நடந்துகொள்ளவில்லை என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமானால், கைது செய்யப்பட்ட 57 பேர்களில் விசைத்தறி உரிமையாளர்கள் 5 பேர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே தொழிலாளர்கள் மட்டும் என்று அல்லாமல் உரிமையாளர்கள் 5 பேர்களையும் சேர்த்துக் கைது செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே பாரபட்சமாக நடந்து கொள்ளவில்லை என்பது தெரியும். ஆனாலும் அத்து மீறி ஏதாவது போலீசார் தவறு விளைவித்திருந்தால், இலாகா பூர்வமாக விசாரணை செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சாரதா ஸ்டுடியோ தொழிலாளர்களைப் பற்றி, தங்களால் 1,000 பேர்கள் என்று நிரூபித்துக் காட்ட முடியும் என்று திரு. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். அவர்களும் திரு. சுப்பு அவர்களைப்போல உணர்ச்சி வசப்படக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் நல்ல பாராளுமன்ற அனுபவமும் சட்ட மன்ற அனுபவமும் விளங்கப்பெற்றவர்கள். அவர்களே 232 பேர் வேலை செய்கின்ற ஒரு ஸ்டுடியோவில் 1,000 பேர்கள் வேலைக்கு எடுத்துக்

கொள்ளப்பட்டார்கள் என்று சொன்னால் அவர்கள் கூறியபடியே பார்த்தால் மொத்தம் 2,000 பேர்கள் அங்கு வேலை செய்ய வேண்டும். நான் 232 தொழிலாளர்கள் என்று சொன்னதை 1,000 பேர்கள் என்று நிரூபிக்க முடியும் என்று சொன்னதைப் போல் நானும் அதை வாதத்திற்காக எடுத்துக் கொண்டு, அவர்களுடைய கூற்றுப்படி 1,000 பேர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள் என்றால் பிறகு ஏன் கிளர்ச்சி, என்று கேட்க முடியும்.

சாரதா ஸ்டுடியோவில் 232 தொழிலாளர்கள் இருந்தார்கள். 17-7-1971 அன்று அந்த ஸ்டுடியோ மூடப்பட்டது. அதையொட்டி ஈட்டுத்தொகையைப் பலர் பெற்றுக் கொண்டார்கள். ஈட்டுத்தொகை பெற்றுக்கொள்ளாதவர்களில் சிலர் மீண்டும் திறக்கப்பட வேண்டுமென்று கிளர்ச்சி நடத்தியபொழுது அரசாங்கம் தலையிட்டு, தொழிலாளர் நலத் துறை அமைச்சரும் அதிகாரிகளும் கலந்து பேசி 7—9—1971 முதல் அந்த அதிபர் ஸ்டுடியோவைத் திறக்க சம்மதித்து, தொழிலாளர்களின் திருத்தப்பட்ட விதிகளின்படி ஒரு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று முடிவிற்கு வந்தார்கள். அந்த ஒப்பந்தத்தை 70 தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, மற்றவர்கள் ஏற்றுக் கொண்டு வேலைக்குச் செல்லச் சம்மதித்தார்கள். இதற்கிடையிலே அவர்களை யெல்லாம் எங்கேயோ கொண்டுசென்று விட்டு விட்டார்கள் என்றெல்லாம் கூறினார் திரு. சுப்பு அவர்கள்.

எழுபது தொழிலாளர்கள், மூடப்பட்டிருக்கும் ஸ்டுடியோவிற்குள் திடீரென்று ஒரு நாள் புகுந்து உள்ளேயிருக்கும் பொருள்களுக்குச் சேதம் விளைவிக்கத் தொடங்கிய பிறகு, போலீசாருக்குத் தகவல் தெரிந்து போலீசார் உள்ளே நுழைந்து அங்கே உள்ளேயுள்ள இடங்களில் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தவர்களை வெளியேற்றி, கைது செய்யாமல், கொஞ்சம் தூரம் தள்ளி, விட்டு விட்டார்களே அல்லாமல், ஏதோ 60, 70 மைல்களுக்கு அப்பால் என்று சொல்வதெல்லாம் மிகத் தவறாகும்.

எழுபது பேர்களில் அதற்குப் பிறகு நடைபெற்ற போராட்டங்களில் சிலர் கலந்து, கைது செய்யப்பட்டார்கள், அவர்களெல்லாம் உடனடியாக ஜாமீனில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். பெரும்பாலான தொழிலாளர்கள் வேலைக்கு வந்தும் சிலர் அங்கே இப்படிப்பட்ட போராட்டங்களிலே ஈடுபட்டு, ஒரு ஒப்பந்தத்திலே பெரும்பாலானவர்கள் கையெழுத்திட்டும், சிலர் கையெழுத்திடாமல் தகராறுகள் செய்து கொண்டும் இருந்தார்கள். அதற்குப் பிறகு அங்கிருக்கும் சில தொழிற் சங்கத் தலைவர்களும், சில அரசியல் கட்சியின் சார்பாகவும் வந்து சொன்ன நேரத்தில் மிக அமைதியான முறையில் சரி செய்துகொள்ளலாம் என்று கூறியதற்கு அவைகளையெல்லாம் கேட்காமல் வன்முறை நிகழ்ச்சிகளில் ஈடுபடத் தொடங்கிய காரணத்தால் ஸ்டுடியோவை நிரந்தரமாக மூடிவிட்டார்கள். 70 தொழிலாளர்களும் கோரியதுகூட என்னவென்றால், மூடுவது என்றால் 'நிரந்தரமாக மூடிவிடு' என்றுதான். அந்தக் கோரிக்கையை ஏற்று கடைசியில் அந்த ஸ்டுடியோவை நிரந்தரமாக மூடிவிட்டார்கள். இந்த 70 பேர்கள் வேலைக்குச் செல்ல மறுக்கிறோம் என்று சொல்லிக் கிளர்ச்சி செய்த காரணத்தால் 170 பேர்களுடைய வேலை போனது தான், இப்பொழுது ஏற்பட்ட பலன் என்பதைத் தொழிற்சங்க நண்பர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

1971 அக்டோபர் 23] [டாக்டர் மு. கருணாநிதி]

திரு. சுப்பு அவர்கள், ஏ. எல். எஸ். அவர்கள் எனக்கு நெருங்கிய நண்பர் என்று சொன்னார்கள். ஏ.எல்.எஸ் மட்டுமல்ல, இங்கே கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்களும் கூட நெருங்கிய தோழமைக் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் தான். அதற்காக, நெருங்கிய கட்சிக்காரர் என்பதால், அரசு சார்பிலுள்ள நாங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கத் தயங்க மாட்டோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சாராதா ஸ்டுடியோவை திறந்து வைத்துக்கொள்ளுங்கள், 170 பேர்கள் வேலை செய்ய மறுத்தாலும் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்ற உத்திரவாதத்தை அளித்திருக்க முடியும். ஆனால், இருக்கிற நிலைமையைப் பார்த்து, ஸ்டுடியோவை மூடிவிட முன்வந்தபோது, நாங்கள் அதற்கு ஒத்துக் கொள்ள வேண்டிய அவசியத்திற்கு ஆளானதற்குக் காரணமே அந்தப் பகுதியிலே வன்முறை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே அல்லாமல் வேறொன்றல்ல. அவரை நாங்கள் பயன் படுத்திக்கொண்டு தொழிற் சங்கத்தை நசுக்கியிருக்க முடியும். தொழிலாளர்கள் மீது போலீசாரை ஏவி விட்டிருக்க முடியும். 170 பேரை வைத்துக்கொண்டு ஸ்டுடியோவை நடத்தியிருக்க முடியும். 170 பேர்கள் கூட வேண்டாம். 100 பேரை வைத்துக்கொண்டு கூட ஸ்டுடியோவை நடத்த முடியும். அந்தத் துறையிலே பழக்கம் எனக்கு உண்டு என்ற காரணத்தால், நான் இதைக் கூறுகிறேன். எத்தனை ஷிப்ட் வைத்துக்கொண்டு நடத்தலாம் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். ஆனாலும் அரசாங்கம் அந்த முதலாளிகள் பக்கம் இல்லாமல் அங்குள்ள நிலைமைக்கேற்ப அரசு நடந்து கொண்டதே அல்லாமல், அந்த ஸ்டுடியோவின் சொந்தக்காரர் எனது நெருங்கிய நண்பர் என்ற முறையில் அல்ல. அவருக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டது என்றெல்லாம் திரு. சுப்பு அவர்கள் குறிப்பிட்டார்கள். லைசென்ஸ் அவர்களுக்கு மாத்திரம் வழங்கப்படுவதல்ல. வேண்டுமானால், திரு. சுப்பு அவர்கள் கேட்டால் கூட, அவர் தகுதி படைத்தவராக இருந்தால் அவருக்கும் அதை வழங்க தயாராக இருக்கிறோம். திரு. சுப்பு எப்போதும் உணர்ச்சிவசப்பட்டு பேசக் கூடியவர். இது அந்தக் கட்சியிலுள்ளவர்களுக்குக் கூடத் தெரியும். அந்தக் கட்சியிலே உள்ளவர்கள் கூட வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். பேசுவதிலே ஒரு ஒழுங்கு முறை இருக்க வேண்டும். லைசென்ஸ் எல்லோருக்கும் கொடுக்கிறோம். பல காங்கிரஸ்காரர்கள் கூட வாங்கியிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் காரர்கள் கூட வாங்கலாம். வேண்டியவர்களுக்குக் கொடுப்பது என்ற ஏதுமில்லை.

திரு. ஹாண்டே அவர்கள் கூடலூர் விவகாரம் பற்றி குறிப்பிட்டார்கள். இது பற்றி இந்த அமைச்சரவை கூட ஒரு முடிவு எடுத்திருக்கிறது. 1971-ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை ஏற்கனவே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறவர்களை அந்த இடங்களிலே நீடிப்பதற்கு அனுமதிப்பது என்று முடிவு எடுத்திருக்கிறது. அது மாத்திரமல்ல. தமிழகத்தில் எல்லாப் பகுதிகளிலும் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு நிலம் வழங்கப்படுகிறதோ, அதே அளவுக்கு கூடலூர் பகுதியிலும் அதே கொள்கை அடிப்படையில், நஞ்சை என்றால் 1½ ஏக்கர் என்றும், புஞ்சை என்றால் 3 ஏக்கர் என்றும் எப்படி இருக்கிறதோ, அதைப் போலவே அங்கேயும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் பாதிக்கப்படுகிற, தேயிலைத் தோட்டங்களில் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிற விவசாயிகள் இருப்பார்களேயானால், அவர்கள் மாத்திரம் அந்த இடத்தைக் காலி செய்ய வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி 100 அல்லது 200 பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாற்று இடம் தருவதற்கும் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதை, சில அரசியல் கட்சிக்காரர்கள், இரண்டு மாநிலங்களுக்கிடையேயான தகராறு என்றும், கூடலூரை வேறு ஒரு மாநிலத்துடன் சேர்க்க வேண்டும் என்றெல்லாம் கூட சிலர் சொல்லி வந்தார்கள். ஏதோ, திராவிட முன்னேற்றக் கழக அரசை யார் எதிர்த்தாலும், எந்த நிலையில் எதிர்த்தாலும் கவலை இல்லை. அந்த எதிர்ப்பு கோஷ்டியுடன் சேர்ந்து கொள்வது என்பது நல்லதல்ல. இந்த அரசுக்கு எதிராகக் கோஷத்தை கிளப்புவது என்பது இந்த மாநிலத்திற்கு எதிராகக் கிளப்பப்படுகிற கோஷமாகும் என்று கருதுகிறேன். எனவே, இந்த அரசுக்கு எதிராக எழுப்பப்படுகிற எந்த கோஷத்திற்கும் ஆதரவு அளிப்பது என்ற மனவளத்தை எந்தக் கட்சிக்காரர்களும் வளர்த்துக்கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொண்டு, இங்கே எடுத்துச்சொல்லப்பட்ட பல ஒத்திவைப்புத் தீர்மானங்களின் பேரில் அளிக்கப்பட்ட விளக்கங்களுக்குப் பிறகு அவைகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்தை தலைவரவர்களுக்குத் தாழ்மையுடன் எடுத்துக்கூறி அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கான அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, இந்தத் தீர்மானங்களுக்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

(ஆ) பாளையங்கோட்டை செயின்ட் சேவியர் கல்லூரி மாணவர்கள் மீது காவல் துறையினர் எடுத்த நடவடிக்கையும், கல்லூரி மூடப்பட்டதும் குறித்து.

MR. SPEAKER : I have also received notice of an adjournment motion from Thiruvalargal S. Alagarswamy and S. Mohammed Khader Mohideen with regard to the police action on the students of the St. Xaxier's College, Palayamcottai, and the closure of the college. I request the hon. Members to explain briefly how this comes under the purview of adjournment motions.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, பாளையங்கோட்டை செயின்ட் சேவியர் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் தங்களுக்குச் சங்கம் வேண்டும் என்று தெரிவித்த கோரிக்கை நியாயமான கோரிக்கை. ஆனால் அங்கே உள்ள கல்லூரியை நடத்துகிற கல்லூரி முதல்வர் அதற்கு அனுமதி அளிக்கவில்லை. ஆகவே, அங்கே மாணவர்கள் கிளர்ச்சி நடத்தினார்கள். நியாயமான கோரிக்கையை முன் வைத்து கிளர்ச்சி நடத்திய காலத்தில் அந்தக் கல்லூரியை மூடிவிட்டார்கள். போலீஸ் தலையிட்டு மாணவர்களை அடித்து நொறுக்கிய காரணத்தால் அவர்கள் காயம் அடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த மாதிரி காரியங்களில் அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மாணவர்களின் நியாயமான உரிமைகளை வழங்க கல்லூரி முதல்வர் மறுத்தால் அவர்களைக் கண்டித்து செயல்பட வேண்டிய, மாணவர் சார்பாக இருக்க வேண்டிய, அரசாங்கம் இதில் தவறிவிட்டது. எனவே, அங்கே நடந்த கொடுமையைப் பற்றியும், என்ன நடவடிக்கை இனி எடுக்க வேண்டும் என்பது பற்றியும் விவாதிக்க இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை கொடுத்திருக்கிறேன்.